https://www.facebook.com

# Kavignan கவிஞன்

facebook
சிறப்பிதழ்

Email or Phone: kavignan@live.com
Web: www.kavignan.com
Log In

36 20 328

முகப்பு



## Kavignan கவிஞன் காலாண்டுக் கவிதையிதழ்

இதழ் 24 | 2013

Your Email

Re-enter Email

*********

ஆடி | ஆவணி | புரட்டாதி

சந்தாதாரர் | இலவச வாசகர்

ஈழத்திலிருந்து **இணையத்தினூடாகவும்** அச்சு வடிவிலும் வெளிவரும் **கவிஞன்** இதழுக்கு நீங்கள் **சந்தாதாரர் ஆகிவிட்டீர்களா?**

சந்தாதாரர் ஆகுங்கள்

Rs.60/=

QR

Kavignan
# கவி ஞன்

தோற்றம் : 27, பங்குனி 2010

கவி ஞன்
24

ஆடி, ஆவணி, புரட்டாதி - 2013

பிரதம ஆசிரியர் : சதாசிவம் மதன்
தொ. பேசி : 0094 77 362 0328
0094 65 365 0153
முகவரி : கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு, 30158,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் : kavignan@live.com
இணையத்தளம் : www.kavignan.com

பிரதம ஆலோசனை :

திரு. வே. தட்சணாமூர்த்தி
திரு. S. P. நாதன்

**இலக்கிய ஆர்வலரா நீங்கள்?**
**அப்படியானால் கவிஞன் தொடர்ச்சிக்கு நீங்களும் உதவலாம்!**

இவ்விதழ் பின்வருவோரின் நிதியுதவியால் வெளிவருகின்றது.

திரு. காசுபதி நடராசா, கவிஞர். செல்லிதாசன்,
திரு. த. இன்பராசா
திரு. சௌந். லெனாட் லொறன்ஸோ,
திரு. சி. புவனேந்திரன், திரு. கி. மகிந்தன்,
திரு. சு. இளங்கீரன், கல்வியூர். விஜயபாரதி,
திரு. த. காண்டீபன், திரு. சி. பிரவு

## உள்ள உள்ள படைப்பாளிகள்



ஆனந்தத்தில் ஒரு அனல்
ஓவியம்


ராஜாஜி ராஜகோபாலன்
என் தங்கை


கந்தசாமி டனீஸ்கரன்
மானமுள்ள மறவர்கள்


காதல் துளிர்களின் ராஜ் (ராஜு)
கவிதையும், காதலும் நீ தான்


மு. கோபி சரபோஜி
சமாதான சுவாசம்


வைகறை
தேவையாய் இருக்கிறது


சி. சிவப்பிரதீபன்
இயற்கை அழகு


மேமன்கவி
பெண்ணியக் கவிதை வளர்ச்சி....


சதாசிவம் மதன்
கவனம் பார்த்து நட....


காவத்தை கனகராஜா
டெங்கு


வேதமூர்த்தி
நிறைமகள்


றிம்ஸா முகம்மட்
உண்மை அறிந்தவள்


நீலாபாலன்
கவிதை, சில அவதானிப்புக்கள்


மு. முருகேஷ்
தமிழில் ஹைக்கூ கவிதைகள்


பொத்துவில் அஸ்மின்
எலி பொறிக்கும் கூட்டுத்தாபனத்தின் செய்திகள்


சிசுபாலன் புவனேந்திரன்
என் தாயும் நானும்


ஸ்ரீராம் விக்னேஷ்
ஈழம் வாழும் என் தமிழ்த் தோழா


சௌந். லெனாட் லொறன்ஸோ
செவ்வி

Kavignan
# கவிஞன்

## உங்களுடன் ஒரு மணித்துளி

மார்க் சக்கர்பர்க் (Mark Zuckerberg) என்பவரால் மாசி மாதம் 2004 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட முக நூல் என்றழைக்கப்படும் Face Book இன்று உலகிலுள்ள 800 மில்லியன் மக்களால் பயன்படுத்தப்படும் ஒரு சமூக இணையத்தளமாக மாறியிருக்கின்றது.

ஒரே எண்ணம், விருப்பம் உடையவர்களை ஒன்றினைக்கும் தளமாக தொழிற்பட முடிவதுடன், அனேக இளம் படைப்பாளிகளுக்கு மிகப் பிரபலமான களமாகக் காணப்படுவது மட்டுமல்லாமல் மிகமிக எளிதாக அதிகமான வாசகர்களைச் சென்றடையும் களமாகவும் இந்த Face Book காணப்படுவது அதன் பிரபலத்திற்கு மற்றுமொரு காரணம் என்றே கூறலாம்.

காலத்திற்கேற்றாற்போல் இணையத்தளம், வலைப்பூ, மின்நூல், அன்ரொயிட் அப்ளிகேசன் போன்ற நவீன தளங்களில் கவிஞன் இயங்கி வருவதை அதன் வாசகர்களாகிய நீங்கள் நன்கறிவீர்கள். அந்த வகையில் முகநூல் இணையத்தளத்திலும் நீண்டகாலமாக இயங்கி வரும் "கவிஞன்" அதன் முக்கியத்துவத்தையும் பயன்பாட்டையும் வாசகர் அறியும் முகமாக முகநூல் சிறப்பிதழை உங்களுக்குத் தருகின்றது.

அன்புடன்,
ஆசிரியர்


**வருட சந்தா ரூபா 500.00**

வருடச் சந்தா தொகையினைக் காசுக்கட்டளை மூலமாக அனுப்ப முடியும்.

**அனுப்ப வேண்டிய தபாலகம்** : புதுக்குடியிருப்பு.

**முகவரி** : ச. மதன், கூட்டுறவுக் கடை வீதி, புதுக்குடியிருப்பு (கி.மா), மட்டக்களப்பு.



# இவ்விதழில் திரு. சௌந். லெனாட் லொறன்ஸோ அவர்களின் chat list இல் ராஜாஜி ராஜகோபாலன்


hi


வணக்கம்


உங்களது முழுப் பெயர் என்ன?


ராஜாஜி ராஜகோபாலன்


வேறு எவ்வாறான பெயர்களில் தாங்கள் அறிமுகமானீர்கள்?


எஸ்.ராஜகோபாலன், ராஜா சரவணமுத்து


தாங்கள் தற்போது வாழும் இடம் பற்றி எமது வாசகருடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?


வாழுமிடம் ஓக்வில் (ஓக் மரங்கள் அடர்ந்து வளரும் ஊர்), ஒன்டாரியோ, கனடா (டொரன்டோவிலிருந்து மேற்கே 60 கிலோமீற்றர் தூரத்தில் ஒன்டாரியோ வாவிக்கரையில் வான் வாழும் அழகிய அமைதியான சிறிய நகரம் உள்ளது)


தாங்கள் கவிதைத் துறையில் எப்படிப் பிரவேசித்தீர்கள்?


நான் எட்டாம் வகுப்புப் படித்த காலத்தில் முதலில் கவிதை எழுத வேண்டும் என்ற ஆவல் உண்டானது. பின்னர் காலத்துக்குக் காலம் குட்டிக் கவிதைகளை எழுதி வந்தேன். இவற்றில் ஒருசில அச்சு வாகனம் ஏறின. இளம் வயதில் என் ஆக்கங்களுக்கு ஆதரவு தந்த எனது தமிழ் ஆசிரியர் ஏகாம்பரநாதன் , சேனாதிராஜசேகரம் (கொழும்பு) மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, தினகரன் ஆசிரியர் காலம்சென்ற சிதம்பரநாதன் ஆகியோர் என் மனதில் மதிப்பிற்குரிய இடம் பெற்றுள்ளனர்.

இதுவரை தங்கள் கவிதைகளைச் சுமந்து வந்துள்ள அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் எவை?

மல்லிகை,தினகரன், வீரகேசரி மற்றும் எனது முகநூல் பக்கங்கள்

எப்போது உங்கள் ஆக்கங்கள் ஒரு தொகுப்பாக வெளிவரும்?

எனது முதலாவது கவிதைத் தொகுப்பும் சிறுகதைத் தொகுப்பும் பெரும்பாலும் இந்த ஆண்டு வெளிவர இருக்கின்றன.

தாங்கள் பெற்ற பரிசுகள் கௌரவங்கள் பற்றி.....?

என்னை நல்லதோர் நண்பன் என்று என் நண்பர்கள் அடையாளம் காட்டுவார்கள் இதைவிடப் பெரிய கௌரவமோ பரிசோ எனக்குப் பெரிதல்ல

இலக்கிய உலகில் நீங்கள் நன்றியோடு நினைவிற் கொள்ளும் நல்லவர்கள் யாவர்?

நான் முன்னர் குறிப்பிட்ட பத்திரிகை ஆசிரியர்கள் என் எழுத்துலக நண்பர்கள் குழாம் , சண்முகம், தில்லை நடராஜா ஆகியோரும், இன்று எனக்கு மனம் நிறைந்த ஊக்கமளிக்கும் முகநூல் நண்பர்களும் முக்கியமாக வைத்தியர்களான மு.க.முருகானந்தம் (கொழும்பு), நில்மினி சுப்ரமணியம் (ஓபர்ண்,அலபாமா,அமெரிக்கா), மூத்த திறனாய்வாளர் மேமன்கவி (கொழும்பு) ஆகியோரும் இன்னும் பலரும்

கவிதை பற்றி உங்கள் கருத்து?

மானுடத்தைப் போற்றும் ஒவ்வொரு எழுத்தும் கவிதையே!

உங்கள் வேலைப்பழுவுக்கு மத்தியிலும் எமக்காக நேரத்தை ஒதுக்கியமைக்கு கவிஞன் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.





Rajaji Rajagopalan

✓Friends Message

Timeline About Photos 22 Friends 11 Mutual More

## என் தங்கை

தங்கையென்றால் எனக்குத்
தாளாத அன்பு கேளீர்!
தம்பிமார் தோள்களென்றால்
தங்கைமார் துணிவு அன்றோ!

என்தங்கை என்னைப்போல்
இருப்பாளென்றெண்ணாதீர்
அம்மாவைப்போல்மிகவும்
அழகாகத் தானிருப்பாள்.

அம்மாதன் அழகையெல்லாம்
அவளுக்கே எழுதிவைத்து
நாளெல்லாம் மிளகாய் சுற்றி
நாவூறு தீர்த்து வைப்பாள்.

கண்ணுக்கு மை வேண்டாம்
கழுத்துக்கு நகையும் வேண்டாம்.
காதிலுள்ள வளையமொன்றே
காணும் இவள் அழகுக்கு.

கோயில் மதிலிடுக்கில்
குடியிருக்கும் வெள்ளைப் புறா.
குத்துவிளக்கின் மேல்
குவிந்திருக்கும் செம்பருத்தி.

தையல் பெட்டிக்குள்
தினமிருக்கும் நெல்லிக் காய்
பாடப் புத்தகத்துள்
புன்னகைக்கும் மயில் இறகு.

தேனில் குழைத்தெடுத்தும்
திகட்டாத தெம்மாங்கு
வானை விட்டிறங்கி
வளைய வரும் வெண்ணிலவு.

அள்ளிமுடித்த கூந்தலில்
அரங்கேறும் கனகாம்பரம்
கதிரவனை வரவேற்கக்
காத்திருக்கும் மாக் கோலம்.

வளையல்கள் ஒதுங்கி நின்று
வாய்விட்டு நகையெழுப்பும்
விரல் யாவும் மருதாணி
விருந்தாடித் திளைத்திருக்கும்.

பாவாடை தாவணியில்
பவனி வரும் மகாராணி
செல்லும் இடமெல்லாம்
சிம்மாசனம் சேர்ந்து வரும்.

Former Writer at Self-Employed





Rajaji Rajagopalan

✓Friends Message

Timeline About Photos 22 Friends 11 Mutual More

அப்பாவின் அதிகாரமெல்லாம்
அலுவலகத்தோடுமட்டும்
அம்மாவின் அரசாட்சி
அடுக்களையோடு நின்றுவிடும்.

என்தங்கை ராச்சியமோ
ஊரெல்லாம் தூள் பறக்கும்
கோயிலுக்குப் போக வர
கொடிபிடித்து முன் செல்வேன்.

நண்பர்கள் வந்து கேட்டால்
நம்பும்படி பொய்கள் சொல்வாள்.
கவலைக்கு மருந்து கேட்டால்
காதலிக்குத் தூதுபோவாள்

தலையிடி வந்தால் போதும்
தலைமாட்டில் இருப்பாள்
தானாய்
காய்ச்சலில் விழுந்தாலோஎன்
காலடியில் கண்துயில்வாள்.

ஆசிரியனாய் நின்றென்னை
அதட்டவும் செய்வாள் நாளும்
அன்புடைத் தோழியுமாய்
ஆறுதலும் தருவாளன்றோ!

காலையில் போனால் நேரம்
கடந்துதான் வருவேன் வாசல்
கதவடி தேய்ந்து போகும்
கால்களும் சோர்ந்து நோகும்
கண்களில் நீரைத் தேக்கிக்
காத்திருப்பாளென் செல்லம்.

பாட்டொன்று பாடு என்றால்
பாரதியை முதலழைப்பாள்
கண்ணன்மேல்உள்ளகாதல்
கண்களில் கனவாய்மிதக்கும்.

கொஞ்சும் குரலினிமை
கொள்ளைகொள்ளும்
சொல்லினிமை.
பண்ணின் பொருளினிமை
பாவையிவள் பண் இனிமை.

காற்றினிலே வரும் கீதம்
கனிந்துருகப் பாடுகையில்
கண்களில் நீர் வடியக்
காலடியில் நானிருப்பேன்.

கால்விரலில் கல்லிடித்து
குருதி சொட்டுக் கசிந்ததற்கு

Former Writer at Self-Employed




Timeline About Photos 22 Friends 11 Mutual More

அம்மாவிடம் ஓடிப் போய்
அழுதழுது சொன்னவளே!

பற்களொன்றும் முளைக்காத
பருவத்தில் நானுனக்கு
சப்பிக் தந்த கச்சானை
எச்சிலென்றும் பாராமல்
எத்தனைமுறை தின்றிருப்பாய்!

ஆயிரம் பெயர்கள் சொல்லி
அழைத்திடு வேனெனினும் அவளின்
"அண்ணா!" எனும்சொல்லில் மட்டும்
அகிலமே அடங்குமம்மா!

என்முன் துயிலெழுந்து
எனை எழுப்புவாள்என்றும்
மறந்துதான் போகாள் அவள்
மல்லிகையால்எனை வருட.

பெரியபிள்ளை யானபோது
பெற்றோரை வணங்கும் முன்னால்
வந்தென் பாதம்தொட்டு
வணங்கியதை மறப்பேனோ?

தங்கையே உனைப் பிரிந்து
தனியனாய்ப் போகேன் தாயே
என்தலை எழுத் திதென்றால்
எழுதியவனையே கொல்வேன்.

தங்கையே உயிரே உன்னைத்
தாயாகக்கொண்டேனம்மா
அன்பையே தந்து என்னை
ஆட்கொண்டு விட்டாயம்மா!

இயமன்என் உயிரைத்தேடி
ஏமாந்து போவான் காண்பீர்!
என்னுயிர் என் தங்கையிடம்
இருப்பதை அறிந்திடாமல்.

---------------

Former Writer at Self-Employed




**டனீஸ்கரன் கந்தசாமி (புதுமைவாணன்)**

✓ நண்பர்கள் | செய்தி

## மானமுள்ள மறவர்கள்

கலைந்து செல்ல - நாங்கள்
கறையான்கள் அல்ல.

காலம் கடந்து குடைபிடிக்க
காளான்களும் அல்ல.

கலைந்து செல்ல - வெறும்
கனவுகள் அல்ல.

மறைந்து செல்லும் அந்த
மழை மேகமும் அல்ல.

மகிழ்ந்து பாடும் மானிடர் -என்றும்
மானமுள்ள மறவர்கள்.

நாம் குடியேறிய குளக்கரை -
எங்கும்
நம் அடியூறிய குருதிக்கறைகள்.

அண்டை நிலமெல்லாம் - நாம்
ஆண்ட நிலமெல்லாம்

அசந்து கிடக்கிறது அழுக்கு - அதை
அசைத்துப் போடுவோம்.

பண்டையர் வந்த பாதைகள் -எங்கும்
மண்டை ஓடுகள்தான் இங்கே.


மண்ணை மாற்றிட கரங்கள் பிடிப்போம்
தன்னைத் தேற்றியே தாயகம் காப்போம்.

மன்னர்கள் நாம்தான் - இன்றே
மண்ணில் அமைதிகள் காப்போம்

நீண்டு கிடக்கும் பாதைகள் - எங்கும்
நிம்மதி பார்ப்போம்.

இளைஞர்கள் நாம்தான்
இனி உலகை ஆள்வோம்.

- CFC-க்குச் சென்றார்
- Kalmunai, Sri Lankaஇல் வாழ்கிறார்
- Kalmunaiஇலிருந்து
- 20 ஜூன் 1988 அன்று பிறந்தவர்















காதல் துளிர்களின் ராஜ் (Raju).

✓ நண்பர்கள் செய்தி

# கவிதையும், காதலும் நீதான்

அவள் வீட்டுச் சாலை நோக்கிப்
கால்கள் மெல்ல நடக்கின்றது
முகம் காணா நொடிகளிலே
மனம் வாடிப் போகின்றது.

சித்திரைத் தேரழகை
தினம் காணத்தானே
மறக்காது தொடர்கின்றேன்
மறைவாய் நின்று பார்ப்பதற்கு...

மனதுக்குள்ளே மண்வீட்டை
மணிமாளிகையாய் அமைத்து -
தினம்
கலர் பூசி வடிவமைத்து
வைக்கின்றேன்
வாடா மல்லிகை
சுகமாக வாழ வேண்டி.

மாடி வீட்டு ஏணிப்படி
மனதை உடைத்து விட
பூப்படைந்தது பூவொன்று
மகரந்தம் சொல்கின்றது
காற்றிலே தூது போய்.


கதவோரம் செவி சாய்த்து
கனிந்து கொண்ட
கனியெல்லாம்
காதல் சுவை தருகின்றது.


காதலும் சுகமென்று
கண் பாசை சொன்னது


பொழுதொன்று புலருமென்று
இரவொன்று மறைந்து செல்ல
ஆசையின் அசைவினிலே
அழகான செம்பருத்தி
கவிதையின் வடிவாக
காதலியாய் அமர்ந்து
கொண்டாள்?

Dubai, United Arab Emiratesஇல் வாழ்கிறார்
Kalmunai, Sri Lankaஇலிருந்து
17 ஆகஸ்டு 1986 அன்று பிறந்தவர்
ஆண்









மு. கோபி சரபோஜி

Follow செய்தி

## சமாதான சுவாசம்

ஆயுதங்களால்
ஆட்குறைப்பு
செய்து கொண்டவர்கள்

ஆயுத பேரங்களின்
சந்தைகளில்
மந்தைகளாகிப் போனவர்கள்

சமாதானத்தின்
சன்னல்கள் மீது
கல்லெறிந்தவர்கள்


அமைதியின் குரல்வளையை
தன் ஆளுமையால்
நசுக்கி எறிந்தவர்கள்

தன் நாட்டு வலிமையை
எதிரி நாட்டு விதவைகளின்
எண்ணிக்கையில் கணக்கிட்டவர்கள்

ஆண்மையற்ற
இவர்களிடம்
கையேந்தி
காத்துக்கிடக்கின்றது
உலக சமாதானத்தின்

வாசலும்! ..சுவாசமும்!

- Worked at Marines
- Sethupathi Government Arts College இல் படித்தார்
- மணமாகிவிட்டது
- Ramanathapuramஇலிருந்து








## அறிவோம் ஆயிரம்

16,562 விருப்பங்கள்

விரும்பியது  செய்தி

சினிமா உலகத்திலும் இப்படி ஒரு தமிழச்சி. ஆங்கில வார்த்தைகளும், ஆபாச வார்த்தைகளும் கலந்து கவிதை எழுத மாட்டேன் என்பதை தன் கொள்கையாகக் கொண்டிருப்பவர் கவிஞர் தாமரை.

அப்படி ஆங்கில வார்த்தைகளும் ஆபாசங்களும் இல்லாமல் எழுதி , விருதுகளும் பெற்று, நிறைய ஆண் கவிஞர்களை வென்றும் விட்டார்.

பொதுவாக , இவரின் கவிதைகள் நல்ல தமிழில் இருக்கும்.இன்றைய நவீன இசையமைபாளர்களின் இசையாலும் , பிறமொழி பாடகர்களின் உச்சரிப்பாலும் தமிழ் வார்த்தைகள் அதன் அழகை இழந்து மொழியின் அழகே பாடல்களில் தெரிவதில்லை.

பொறியியல் படித்திருந்தாலும், தமிழின் மீது இத்தனை ஆர்வத்துடனும், பணத்திற்காக எதையும் செய்யும் ஒரு துறையில் தனக்கென ஒரு கொள்கையுடனும், சமூக அக்கறையுடனும் இருக்கும் இவரை நிச்சயம் பாராட்டியே ஆக வேண்டும்.

காதலையும், தாய்மையையும் தாண்டி இன்னும் நிறையப் புரட்சிக் கவிதைகள் படைக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன்,சேற்றில் முளைத்திருக்கும் இந்த செந்தாமரைக்கு நம் வாழ்த்துக்கள்!

தொகுப்பு
அறிவியல், பொது அறிவு, தொழில்நுட்பம் என அறிவோம் ஆயிரம்

16,562





வைகறை வைகறை

✓ நண்பர்கள் செய்தி

## தேவையாயிருக்கிறது....

கொட்டித் தீர்க்கப்படாதிருக்கும்
ஒரு அழுகைக்கும்

கொடுத்துவிடத் துடிக்கும்
ஒரு முத்தத்திற்கும்

வெளிப்பட வேண்டிய
ஒரு கவிதைக்கும்

நனைந்தாக வேண்டிய
ஓர் அழகான மழைக்கும்

இப்படி
புரட்டப்பட வேண்டிய
பல வெற்றிடங்களுக்கும்

தேவையாயிருக்கிறது
ஒரு வெற்றிடம்!!

வைகறை,
தருமபுரி-636811
9688417714


Sri Ganesar Higher Secondary School, Thiruchendur-க்...
Pennagaramஇல் வாழ்கிறார்
Thiruchendur, Indiaஇலிருந்து
3 மார்ச் 1979 அன்று பிறந்தவர்














Passarai Kaawathai Kanagarajah

✓ நண்பர்கள் ▾ | செய்தி ✲ ▾

காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும் ▾

# டெங்கு

ஆதியில் வந்தது சிரங்கு!
அதிரடியா வந்தது டெங்கு!
அதனால ஊதுறாங்க சங்கு!
அனைவரும் செலுத்த வேண்டும் பங்கு!
செட்டிபாளயத்தில் குடிக்குராங்க நுங்கு!
சிறட்டையில் உருவாகுது டெங்கு!
பசறையில் வந்தது டெங்கு!
பலருக்கு அடையாளங் கண்டு!
ஒரு கிழமையில் ஒருநாள் நின்று!
உருப்படியா துப்பரவு செய்து கொண்டு!
உயிர்வாழ வேண்டுமென்று வந்து!
உதறி சென்றார்கள் கண்டு!
இனியாவது இடையில் இறக்காமல் இருந்து!
இன்பமயமாக வாழ்வது நன்று!!!

Tea Factory Officer at Tea

Bd/Gonakelle tamil maha vidyalayam-இல் கற்றார்

Badulla, Sri Lankaஇல் வாழ்கிறார்

Passara, Sri Lanka இலிருந்து

மணமானவர்




ur siva

## இயற்கை அழகு

எங்கிருந்து வந்தாயோ ?
இயற்கை எனும் அழகியே நீ !
அண்டம் வெடிக்கப் பிறந்தாயோ?
பூமி எனும் வடிவில் நீ !
சூரிய சந்திரனைக் கொண்டு
இரவு பகல் என அழகு
சேர்க்கிறாய்

பாரின் அழகையோ பலகோடி
உயிர்களால்
பலவிதமாய் அழகுசேர்க்கிறாய்
பனி சிந்தும் புல்வெளியும் - நறு
மணம் வீசும் மலருமாய்
எண்ணற்ற பறவையும்
மிருகமுமாய்
இத்தனையையும் ரசிக்கப்
பிறந்த
மானிடப் பிறவியையும் ஈன்று
உன் அழகை மெருகூட்டுகிறாய்

மனதை வருடிச்செல்லும்
இதமான காற்றும் - காலைக்
கதிரவனின் கடற்கரைச்
சாயலும்
அஸ்தமிக்கும் சூரியனின்
அந்திப் பொழுதும் அழகுதான்

அண்ணார்ந்து அண்டம்
பார்த்தால்
ஆகாயம் ஓர் அழகு
அம்புலி மாமாவாம் ஆகாய
வெண்ணிலா
விண்மீன்கள் சூழ்ந்த
தண்மதியின்
ஓர் ஒளியும் பேரழகு

அட என்ன ஆச்சரியம் !
உவர்கடல் நீர் ஆவியாகி
மேகமாய் உருவெடுத்து
வர்ணங்கள் நிறைந்த
வானவில்லும்
மின்னலும் முழக்கமுமாய்
உவர்நீர் நன்நீராய் மீண்டும் -
மண்ணில்
மழைத்துளியாய் வந்தடைந்து

Graphics Designer at Graphics Designer
University of Peradeniya இல் படித்தேன்
Batticaloa இல் வாழ்கிறார்
Batticoloa, Sri Lanka இலிருந்து












ur siva

என்றோ ஒருநாள் - இலக்கை
அடைந்திடுவோம் என்று
பாய்தோடும் அருவியாய்
வளைந்து நெளிந்து
அழகுச்சாயல் வீசி -
பல்லாயிரம்
உயிரினத்தின்
வாழ்விடமாயிருந்து
காடு மேடு கடந்து
கடலை அடைகிறாய் !

ஐயோ எத்தனை அழகு !
இத்தனை அழகையும்
இரு இமைகள் திறந்து
இவளை ரசிக்க - இந்த
ஒரு ஜென்மம் போதாது

இதயம் தொட்டு இமயம்
வரைக்கும் - உன்
அழகை வர்ணிக்க
எம் மொழியும் போதாது
இயற்கை அழகியே !

இவள் உங்கள் வரிகளில்
தவழுகையிலும் சரி
பூமியின் மடியில் தவழுகையிலும்
சரி
இவளே உன்னதம் !

Graphics Designer at Graphics Designer
University of Peradeniya இல் படித்தேன்
Batticaloaஇல் வாழ்கிறார்
Batticoloa, Sri Lanka இலிருந்து









காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும்

# பெண்ணியக் கவிதை வளர்ச்சி

## இலங்கை பெண் கவிஞர்களின் வழியாக...

கடந்த இதழ் தொடர்ச்சி.....

........அக் கவிதைகளுடன் இலங்கையில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் எழுதும் பெண் கவிஞர்களான Alfreda de Silva, Amirthanjali Sivapalan> Anne Ranasinghe> Jean Arasanayagam & gt; Kamala Wijerathne, Prianthi Wikramasuriya, Roshani Jayathilake, Geeta Premaratane, Parvathi Arasanayagam, Monica Ruwanpatirana, Maureen Seneviratne, Manel Abeyratne, Yasmine Gooneratne போன்ற நமக்கு அறிமுகமான, பெண்கவிஞர்களின் கவிதைகளுடன் இணைத்துப் பார்த்தால், ஆணாதிக்க சமூக அமைப்பில் குடும்பம் எனும் கட்டமைப்புக்குள்ளும், ஆண் - பெண் உறவு நிலைகளிலும், பெண்களின் அக உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும், நாம் இக் கட்டுரையில் பார்த்த பெண்ணின் உடல் வெளி மீதான வன்முறையை பேசுவதுமாக இப்படியாக பல விடயங்களில் பெண்ணிய நிலை நின்று பார்த்தால், அக் கவிதைகள் பேசியிருப்பதன் மூலம், இலங்கை பெண்ணியக் கவிதை வளர்ச்சியில் பங்காற்றி இருக்கின்றன எனலாம்.

அக் கவிதைகளை கொண்ட நீண்டதொரு விரிவான ஆய்வினை மேற்கொள்ளும்: பொழுது, இலங்கை பெண்ணியக் கவிதைகளின் வளர்ச்சியினை இன்னும் நாம் ஆழமாக அறியக் கூடியதாக இருக்கும்.


மேலும், அத்தகைய ஆய்வின் மூலம், இலங்கை பெண்ணணியக் கவிதைகளின் வளர்ச்சியானது, பின்காலனிய இலக்கிய (Post-colonial Literature) வின் போக்கில், பின் காலனிய பெண்ணிய எழுத்துக்களின் (Post-colonial Feminist Literature) வளர்ச்சியோடு இணைத்துப் பார்க்க கூடியதாக இருக்கும் எனலாம்.

(இலங்கை சட்டக்கல்லூரி வெளியிட்ட நீதிமுரசு (2009) மலரில் வெளிவந்த இக் கட்டுரை பெண்ணியம் இணையத்தளத்தில் மறுபிரசுரமானது.)

-முற்றும்-

Colombo, Sri Lanka இல் வாழ்கிறார்
Colombo, Sri Lanka இலிருந்து
837 நபர்கள் பின்தொடர்கிறார்கள்








Mathan Sathasivam

காலக்கோடு அறிமுகம் படங்கள் 243 நண்பர்கள் 805 மேலும்

# கவனம், பார்த்து நட

கட்டுச்சோறு கட்டிக்கிட்டு
காட்டுவழி போற மச்சான்
கிட்ட நானும் ஒட்டி வந்தா
இடந் தருவாயா – உந்தன்
கிட்ட நானும் ஒட்டி வந்தா
இடந்தருவாயா – மனசுக்குள்ள
இடந்தருவாயா?

பட்டப் பகல் வேளையிலே
பாட்டுக்கட்டி நான் படிக்க
கேட்டுக்கிட்டு நீயிருக்க
போய் வருவாயா - இல்லை
விட்டு விட்டு ஓடிநீயும்
போய் மறைவாயா?





பிட்டுடனே வாள மீனு(க்)
கூட்டுவச்சி நான் தரவா
கட்டித்தயிர் சட்டியையே
ஒட்டுமொத்தமாய்த் தரவா
வெட்டி வேலை பாக்கிறாயே
கிட்ட வா மச்சான் - எனக்கு
சட்ட வாங்கிப் போட்டுத் தாலி
கட்ட வா மச்சான்.

எட்டுப் புள்ள பெத்துப் போடு
பட்டுப்போல நான் வளர்க்க
மாட்டு வண்டி கட்டிப் போடு
நாட்டை நாம சுத்திப் பார்க்க

(வேறு)
சொட்டுச் சொட்டா உன்ன
நானும்
சுட்டுக் கொல்லுவண்டா – நீயும்
எட்டி எட்டி வேற பொண்ண
தொட்டுப் பார்த்தயண்டா!

Nursing Officer at base hospital kattankudy
2011 முதல் தற்போது வரை

College of Nursing Batticaloa இல் படித்தேன்
கடந்தகாலம்: Sivananda




## கவிதை சோலை

78 விருப்பங்கள் · 3 இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்

பிடித்திருக்கிறது | செய்தி

கவிதை சோலை
15 ஜனவரி

கவிதை எண் 3:

காதலியின் காலடி
கல்லறையாக இருந்தாலும்
எனக்கு கவலை இல்லை, ஏனெனில்
கல்லறையிலும் அவள் காலடி
இருக்கும் என்பதற்காக..

-சூர்யா

விருப்பம் · கருத்து · பகிர்க

கவிதை சோலை
15 ஜனவரி

கவிதை எண் 4:

உன்னை காண என் கண்கள் துடிக்கிறது
உன்னிடம் பேச என் வாய் துடிக்கிறது
நீ பேசுவதை கேட்க என் காதுகள் துடிக்கிறது
இவற்றையெல்லாம் எண்ணி
என் இதயம் துடியாய் துடிக்கிறது...

-சூர்யா

கவிதை சோலை
15 ஜனவரி

கவிதை எண் 5:

வாழ்க்கை என்பது யோசிப்பது
காதல் என்பது நேசிப்பது
நட்பு என்பது சுவாசிப்பது

யோசிக்காமலும், நேசிக்காமலும் இருக்கலாம் ஆனால்
சுவாசிக்காமல் ஒரு கணம் கூட இருக்க முடியாது..

- copied

விருப்பம் · கருத்து · பகிர்க 1

கவிதை சோலை
15 ஜனவரி

கவிதை எண் 6:

இதயத்தில் நீ இருந்தால் மறந்து விடலாம்..
இதயமே நீயாக இருந்தால்....?

-copied

விருப்பம் · கருத்து · பகிர்க 1

# கள்ளிக்காட்டு இதிகாசம்

I ♥ Poetry

## கவிதை சோலை

78 விருப்பங்கள் · 3 இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்

பிடித்திருக்கிறது · செய்தி

கவிதை சோலை
15 ஜனவரி

கவிதை எண் 7:

பிரிவிற்கு பின் வருந்துவதை விட
அவ(ளை/னை),
புரிந்து கொள்ள முயன்று பார்..
அவ(ள்/ன்)
உன்னை விட்டு பிரிந்து செல்ல மாட்டா(ள்/ன்)..

-அரவிந்த்

விருப்பம் · கருத்து · பகிர்க 1

கவிதை சோலை
16 ஜனவரி

கவிதை எண் 8:

வியக்கின்றேன் பெண்ணே!!!

கல்லை சிலையாக்கும் என் உளியை கண்டு அல்ல

என்னை கல்லாக்கிய உன் விழியை கண்டு...

-அரவிந்த்

விருப்பம் · கருத்து · பகிர்க 1

கவிதை சோலை
30 ஜூன்

கவிதை எண் 12:
எப்பொழுதெல்லாம்
உன் மனம் வலிக்கின்றதோ
அப்பொழுதெல்லாம்
உன்னை அதிகமாக நேசிக்கும்
உள்ளத்திடம் பேசிப் பார்
ஏனெனில்,
உன் வலியை போக்க
உன்னை நேசிக்கும் உள்ளத்தால் மட்டுமே
முடியும்..
- copied

விருப்பம் · கருத்து · பகிர்க 4

கவிதை சோலை
30 ஜூன்

கவிதை எண் 11:
தண்ணீரும் தனது வாழ்க்கை பயனை அடைந்து
விட்டது..
அது,
கண்ணீராக உனது கரு விழிகளில் வழிந்தோடும்
போது...

- அரவிந்த்

கவிதை சோலை
3 ஜூலை

படித்ததில் ரசித்தவை:
"பேசாத வார்த்தையைவிட
பார்க்காத கண்களை விட
உன்னை எப்பொழுதும் நினைத்து கொண்டிருக்கும்
இதயத்திற்கு வலி அதிகம்..."

விருப்பம் · கருத்து · பகிர்க 2

# நிறைமகள்

- வேதமூர்த்தி -



நிறைமகள்

✓ நண்பர்கள் ▾ செய்தி

காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும் ▾


## திருப்புமுனை

குருத்து மணலில்
கோவலன் மாதவி
கொஞ்சலுக்குக் குறைவில்லை
மிஞ்சி மிஞ்சிப்போய்
பஞ்சணை மெத்தையில்
பாடல் பிறந்தது.
யாழை வாங்கிய ஏழை மாதவி
தட்டித் தடவி
தாளம் சரியாக்கி
தலைவனிடம் கொடுத்தாள்
சாதகம் மாற்ற
கோவலன் பாடினான்
காவிரியைக் கைப்பிடித்தான்
கரிகாற் சோழன்
கால ஓட்டத்தில்
கங்கையையும் கைப்பிடித்தான்
கனத்த பெருவலியால்
கன்னியா குமரியையும் பிடித்தான்
கரை கடந்து
கடைசிவரை சென்றான்
காதலினால்
தாரணியைக் கைப்பிடிக்க
ஆயினும்
காவிரி நங்கை அவனைக்



# நிறைமகள்

- வேதமூர்த்தி -



நிறைமகள்

✓ நண்பர்கள் செய்தி

காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும்

கைவிட்டு விடவில்லை தன்
காதலை முடிக்கவில்லை
கற்பின் மிகுதியால்
காலம் முழுதும் கணவனைக்
கைக்குள்ளே கட்டி வைத்திருந்தாள்
கலங்கினாலும் கலங்காமல் என்று
ஆற்றுவரி பாடி - பின்
அப்பாலும் பாடினான்- அது
அனல் வரி.
தங்கமாய் ஒரு
நங்கையாள், எழில்
பொங்கிடும் நெஞ்சத்தில்
கொங்கையாள், கூர்விழி கொண்டந்த
மங்கையாள் என்னைக்
காதலில் மூட்டினாள் கனலாய்.
ஆகா, அன்னமே!
உந்தன் நடையென்ன நடை
ஊன நடை.
நீ ஒருக்கால்
ஓடிப்போய் பார் அவளை
உருப்படுவாய் ஒருவேளை
என்று
கோவலன் யாழிலே
கானல் வரியைக் கலக்கினாள்
அவன் மனதில் கள்ளமில்லை - ஒரு
களங்கமில்லை
மாதவியாள் மனம் விட்டு
மாறவில்லை.
வெறும்
காதல் வரிகளே கானல் வரியாக
காவியம் கானலாய் ஆனதோ?
உலக வாழ்க்கையில்
ஊழின் வலி வந்து
உறுத்தித்தான் தீருமோ?

(இன்னும் நிறைவாள்...)

K.Jeyanthan
Music Director & Singer
+94 77 088 6358

# KJ MUSIC PRODUCTION

K.Jeyanthan. Music Director & Singer. Srilanka
e.mail : KJMusicproduction@hotmail.com

YouTube
Jeyanthan13



## MusicDirector K. Jeyanthan

✓ விரும்பியது | செய்தி

13,651 விருப்பங்கள் · 1,030 இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்

**MusicDirector K. Jeyanthan**
24 ஜூலை

முகபுத்தக காதல் பாடல் (Facebook Tamil Song)
ஈழத்து இசையமைப்பாளர் DR.K.ஜெயந்தனின் இசையில் கவிஞர் சிந்து ராகவனின் வரிகளில் ஜெயந்தன் ,பிரதா கந்தப்பு ,மனோஜ் ஆகியோர் பாடிய பாடல் ராப் வடிவம் -ஹசிக்
ஒளிபதிவு எடிட்டிங் -பிரியந்தன் நடிகர்கள் -சந்துரு ,மிதுனா
இயக்கம் - தர்மலிங்கம்பிரதாபன்
தயாரிப்பு -தமிழ் கீ இணையத்தளம்



விருப்பம் · கருத்து · பகிர்க 438 93 585

**MusicDirector K. Jeyanthan**
20 ஜூலை

யாழ்மண்ணில் நடைபெறும் எமது நேரடி நிகழ்ச்சியை கேட்க இந்த லிங்க் இணை கிளிக் செயுங்கள் இரவு 9.00 மணிக்கு ஆரம்பம்http://station.voscast.com/51ab352a3a336/
http://station.voscast.com/51ab352a3a336/

விருப்பம் · கருத்து · பகிர்க 25 3

**MusicDirector K. Jeyanthan**
ஈழத்து இசையமைப்பாளர் DR.K.ஜெயந்தனின் இசையில் கவிஞர் சிந்து ராகவனின் வரிகளில் ஜெயந்தன் ,பிரதா கந்தப்பு ,மனோஜ் ஆகியோர் பாடிய பாடல் ராப் வடிவம் -ஹசிக்
ஒளிபதிவு எடிட்டிங் -பிரியந்தன் நடிகர்கள் -சந்துரு ,மிதுனா இயக்கம் தர்மலிங்கம்பிரதாபன்
தயாரிப்பு -தமிழ் கீ இணையத்தளம்
விருப்பம் · கருத்து · பகிர்க · 24 ஜூலை

S.t. Seelan, ஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் வேறு 435 பேர்கள் ஆகியோரின் விருப்புக்குரியது. சிறந்த கருத்துக்கள்

585 shares

உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்...

ஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜா முகநூல் ஒரு அற்புதமான சாதனம்!! அதன் அருமை பெருமைகளை இசைவடிவில் தரும் இக்கலைப் படைப்பு பாராட்டுதற்குரியது!! பங்களிப்பைத் தந்த கலைஞர்களுக்கு வாழ்த்துக்கள்!!
விருப்பம் · மறுமொழி · 10 · 25 ஜூலை இல் 08:46 AM · Edite

**Vathiri C Raveendran** Dr.super
விருப்பம் · மறுமொழி · 25 ஜூலை இல் 05:52 AM

**Krishna Elango Keo** மெலடியஸ் இசை
சிறந்த பாடல்
இனிமை புதுமை அற்புதம்
தொடரட்டும்
கவிஞர் பாடகர் இசை அமைப்பாளருக்கு குழுவிற்க்கு
பாராட்டுகள்
விருப்பம் · மறுமொழி · 2 · 25 ஜூலை இல் 07:44 AM

**Sivasithamparam Sharmilan** Super
விருப்பம் · மறுமொழி · 1 · 25 ஜூலை இல் 03:02 AM via கைத்தொலைபேசி

**Nirupan Sella** கடல் தாண்டிப் போனாலும் நம் காதல் தொடரும் .......
விருப்பம் · மறுமொழி · 2 · 25 ஜூலை இல் 07:57 PM

**Darshi Niranjan** Nise song
விருப்பம் · மறுமொழி · 1 · 25 ஜூலை இல் 01:38 PM via கைக்தொலைபேசி

இசை கலைஞர்/இசைக்குழு
Facebook This is an official fan page of MusicDirector K. Jeyanthan..get connected

பற்றி - திருத்தப் பரிந்துரை



படங்கள்

13,651
விருப்பங்கள்



KJ FM (ONLINE)

K.Jeyanthan
Music Director & Singer
+94 77 088 6358

KJ MUSIC PRODUCTION



K.Jeyanthan. Music Director & Singer. Srilanka
e.mail : KJMusicproduction@hotmail.com

YouTube
Jeyanthan13

**MusicDirector K. Jeyanthan**

✓ விரும்பியது | செய்தி

13,651 விருப்பங்கள் · 1,030 இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்

## பேஸ்புக் சிறப்புப் பாடல்

உலகமே உந்தன் கையிலே ஏழு கடல்களும் உன்னை வணங்குமே

உலகம் தாண்டிய விஸ்வரூபம் உனக்குள் தானே எங்கள் சுவாசம்
சிகரமே நட்பின் சிகரமே முக புத்தகமே நட்பின் உதயமே

உலகம் பேசும் ஒரே மொழி FACEBOOK நீதானே
எம் உயிர்கொண்ட காதல் இதயங்கள் பேசும் FACEBOOK நீதானே
கண்டம் தாண்டி இணையம் வந்த நண்பன் நீதானே
கணணி திரையில் நட்பை தந்த சொந்தம் நீ தானே
உனக்குள்ளே வாழ்கிறோம் உலகத்தை ஆள்கிறோம்
கனவுக்குள் மாய்கிறோம் எங்கள் நட்பை தந்தாயே
எம் நெஞ்சில் நின்றாயே ......

சுவிங்க பெண்ணே SING IN செய்து உன்னை கண்டேனே
உன் INBOX உள்ளே கவிதைகள் நூறு உனக்காய் தந்தேனே

இசை கலைஞர்/இசைக்குழு
Facebook This is an official fan page of MusicDirector K. Jeyanthan..get connected

பற்றி - திருத்தப் பரிந்துரை



படங்கள்

13,651
விருப்பங்கள்



KJ FM (ONLINE)

K.Jeyanthan
Music Director & Singer
+94 77 088 6358

KJ MUSIC PRODUCTION

K.Jeyanthan. Music Director & Singer. Srilanka
e.mail : KJMusicproduction@hotmail.com

YouTube
Jeyanthan13



**MusicDirector K. Jeyanthan** ✓விரும்பியது செய்தி

13,651 விருப்பங்கள் · 1,030 இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்

ONLINE சட்டிங் நீ வந்தால் என் ஹார்ட் இல பட‌படப்பு
உன் Sharing பார்த்த முதல் தடவை என் ஹார்ட் இல கத கதப்பு
பெண்ணே நீ FIREFOX ஆ ஹார்மோன்கள் எரிகிறதே
SKYPE வருவாயா இதயத்தை தருவாயா
என் இதயம் முழுதும் உனக்காய் தந்தேன் எங்கே சென்றாயோ
காலை சூரியன் நீதானே உன்னில் கண்விழிப்போம்
எம் நண்பர்கள் போடும் கவிதைகள் எல்லாம் நாளும் கமெண்ட் அடிப்போம்
செவ்வாய் கிரகம் போனாலும் அங்கும் நீதானே
எந்த தேசம் முழுதும் பேசும் மொழியே நீதானே

IPHONE இல் வருவாயா I LOVE YOU சொல்வாயா
கடல் தாண்டி போனாலும் நம் காதல் கலையாதே
எம் கண்ணீர் துளியை நாளும் துடைக்கும் நண்பன் நீதானே

இசை கலைஞர்/இசைக்குழு
Facebook This is an official fan page of MusicDirector K. Jeyanthan..get connected

பற்றி - திருத்தப் பரிந்துரை




படங்கள்

13,651

விருப்பங்கள்



KJ FM (ONLINE)






காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும் ▾

# உண்மை அறிந்தவள்

வெயிலில் எரிகிறாளா
குளிரில் உறைகிறாளா
உணவு உண்டாளா
உறக்கம் தொலைத்தாளா
என்ன செய்து கொண்டிருப்பாள்?

கைச்சேதப்பட்டு இப்படி ஆனாளா
அல்லது – பிள்ளைகள்
கைவிட்டதனால் இப்படி ஆனாளா?

பாதையோரம் அவளுக்கு வீடு
உடைந்த குடை
அந்த வீட்டின் கூரை!

வேளாவேளைக்கு உணவு?
படைத்தவனுக்குத் தெரியாதா
படியளக்க?
ஏதோ சாப்பிடுகிறாள்!

ஒரு போத்தல் தண்ணீரை
மூடியில் ஊற்றியூற்றிக்
குடிக்கிறாள்..

தண்ணீரின் பெறுமதி
எம் எல்லோரையும் விட
அவளுக்குத் தெரிந்திருக்கிறது!

சொந்தங்கள் இல்லை – அதனால்
சோகங்களும் இல்லை
பொதியொன்றைத் தவிர
அவளிடம் வேறெதுவுமே இல்லை!


உலகம் நிரந்தரமில்லை என்பதை
உலகுக்கு அறிவிக்கும்
ஞானியா அவள்?

அதனால்தான்
பேராசை, பொறாமை,
டாம்பீகம், வீண்பெருமை
எல்லாம் மறந்து
அவளது உலகில்
இன்பமாயிருக்கிறாளா???

Accounting at air conditioning company
AAT Sri Lanka இல் படித்தேன்
Colombo, Sri Lanka இல் வாழ்கிறார்
Weligama இலிருந்து

air conditioning company
Accounting · Colombo, Sri Lanka

AAT Sri Lanka
Colombo, Sri Lanka


தேனம்மை லெக்ஷ்மணன் கவிதைகள்


Subramaniam Kuneswaran


Uma Varatharajan


Danistaran Kandasamy


Kavignan Kavign

# கவிதை சில அவதானிப்புக்கள்

## 04



- நீலாபாலன் -

**கடந்த இதழ் தொடர்ச்சி.....**

இலக்கியம், முழுக்க ஒரு மொழிக் கலையல்ல இலக்கணம் எப்பொழுதுமே இலக்கியத்தைப் படைப்பதில்லை. எழுத்தியல், மனித இயலின் உணர்வுத் தெறிப்புகளைப் பூசிக் கொண்டுவருவது. இலக்கியம், எழுத்து, படைப்பியல் என்பவை மனித வாழ்வனுபவங்களிலிருந்து பிறக்கும் புதிய கருத்துகளின் தொகுப்பு.

எழுத்தை ஆழ்பவன், தன்னுடைய வாழ்வனுபவங்களினூடாக, தான் பெற்ற சிலிர்ப்பையும், உயிர்ப்பையும், அட்சரம் பிசகாமல் அப்படியப்படியே பதிவாக்கம் செய்கிறான். அந்தப் பதிவின் அதிர்வுகள் அச் சமூகத்தின் மீழ் எழுகைக்கான உபாயங்களையும், வழிவகைகளையும் தொட்டு, சுட்டிக் காட்டுகின்றன. மனிதன் எதையும் ரசிப்பவன், ரசிக்கத் தெரிந்தவன். ரசனைதான் மனித குலத்தின் முதற் பிரசவம். கற்பனையும், சிந்தனையும் அந்தத் தலைப் பிரசவத்தின் இலட்டைப் பிள்ளைகள். கனவும், வினாவும் தான் மானிட சிந்தனையை அகல்விரிவாக்கிக் கொண்டிருக்கின்றன.

எழுத வேண்டுமென்ற ஆர்வமுள்ளவர்கள் இயற்கையை மட்டும் வாசித்தாற் போதாது. முன்னைய, முன்னவர்களின் எழுத்துக்களை அந்த எழுத்தினூடாக விதைக்கப் பட்டிருக்கும் கருத்துக்களை, சிந்தனை வீச்சுக்களை, சொல்லப்பட்ட விதங்களையெல்லாம் ஆர்வத்தோடு கற்றுக் கொள்ள வேண்டும். அது அவர்களைப் புதுப்பித்துக் கூராக்கிப் புடம்போட உதவும்.

இதயத்தில் பொங்கி ஊற்றெடுக்கும் உணர்வுகளின் தெறிப்புகளை, கவிதைகளாக, அகழவும், வனையவும், கவிஞன் பெற்றுக் கொண்ட கற்றுக்கொண்ட வாசனை அனுபவங்கள் நிச்சயமாக வழிகாட்டவே செய்யும். வான்பீச்சிய எச்சங்களே நட்சத்திரங்களென்பதைப் போல காலம் பிரசவிக்கும் உணர்ச்சிக் கூட்டங்களின் கலவையே கவிதை.

வார்த்தைகள், வெறும் ஒலிவடிவங்கள் மட்டுமல்ல, அவை தன்னுள் அதிகமான சக்திகளைப் புதைத்து வைத்திருக்கும் ஆயுதங்கள். ஆகவே, அந்த வார்த்தைப் பிரயோகங்களில் கவிஞன் மிகுந்த எச்சரிக்கையுடையவனாகவும், அவற்றைப் பயன்படுத்தும் போது அதன் வலு, வேகம், அழகு, சப்தம், கருத்துக்கு அவைதரும் புத்தொளி ஆகிய வற்றைப்

தேர்ந்தெடுத்து கையாளும் பக்குவமும், நுண்திறமையுடையவனாகவும் தன்னை ஆக்கிக்கொள்ளும் கவிஞர்களே வெற்றிகளைக் கொய்கிறார்கள்.

வித்தியாசமான பார்வை, புதிது புதிதாக உவமை, உருவகங்களை விதைக்கும் ஆற்றல், இலகுவாகவே புரிந்துகொள்ளக் கூடிய குறிப்புபொருள் வீச்சு இவை வாசகனை மட்டுமல்ல. கவிதை செய்பவர்களையும் கவரும்.

பூக்களிலே நானுமொரு
பூவாயய்ர்தான் பிறப்பெடுத்தேன்
பூவாய்ப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே!
பொன்விரல்கள் தீண்டலையே - நான்
பூவாக மாறலையே!

என்ற மூ. மேத்தாவின் 'அரளிப்பூ அழுகிறதுது' கவிதை கைபடாத ரோஜாக்களாகவிருக்கும் முதிர்கன்னியர்களின் உள்ளக்குமுறலை உணர்ச்சி ஏக்கத்தை வெளிப்படுத்துகிற குறியீட்டுக் கவிதை.

உணர்வழுத்தமும், புலக்காட்சித் திறனும், இசைத்தன்மையும், செறிந்து, நிறைந்து இக்கவிதையை மிக உயரத் தூக்கிவைக்கிறது. உணர்வுத் தீவிரமும் (Intensity) அழகிய மொழி இழைப்புமே இக் கவியாப்பின் திறப்புக்குக் காரணமாகும்.

கவிதையைக் கற்றுப் பிரசவிக்க முடியாது, அது உணர்வுமேகம் கருக் கொள்ளும் போது சுயமாக வந்து பிரசவமாவது. எழுத்துக்கூட்டி இலக்கணம் பார்த்து எழுதுவதற்கு கவிதையொன்றும் பேரல்ல, அப்படி இலக்கணச் சூத்திரத்தோடு பின்னப்படுவது கவிதையுமல்ல.

செய்யப்படுவது செய்யுள்
உணர்வுகளிலிருந்து கொய்யப்படுவது கவிதை.

சும்மா நினைத்துக் கொண்டும், அலைந்து கொண்டும், கால்களை உதைத்துக் கொண்டும், தன்னைவதைத்துக் கொண்டும் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்து கடைந்து தருவதல்ல கவிதை.

இறுக்கமும், செறிவும் அமைந்ததாகக் கவிதைகள் வெளிவர உவமை, உருவகங்கள் உதவிபுரிகின்றன. இந்த உவமை, உருவகங்களே, கவிதையின் அர்த்தப் பொலிவைத் தருகின்றன. அறிவும், உணர்ச்சியும் இயைந்த மனவிளைவை சட்டென்று தெரியக் காட்டுவது படிமம்.

இலக்கியம், மனிதனின் சிந்தனை, நம்பிக்கை, நாகரீகம், பண்பாடு போன்ற பெறுமானங்களோடு உறவாடி, ஊடுருவி நிற்பது சூழமைவுகளின் சுமைகளை,

துயரங்களைச் சொல்வது. கவிதை ஒரு சுகானுபவம், அது ஓர் ரசனைப் பதிவு: ஏற்கனவே திட்டமிட்டு சொல்லப்படும் செய்தியல்ல கவிதை.

ஒரு கலைப்படைப்பு விதிமுறையாலன்றி, விவரணமுறையாலும், வாசகனை ஈர்த்து, நெறிப்படுத்தும் தன்மையைக் கொண்டது. புனைவிலக்கியத்துறையில், மாற்றங்களுக்குள்ளாவதும், மாற்றங்களுக்குள்ளாக்கப்படுவதும் கவிதையே. அப்படி கவிதை, தான் பெற்றுக் கொண்டவற்றை வெளிப்படுத்தியும் வருகிறது. புதிய புதிய கருத்தியல்கள், புரிந்தால் இனிக்கும் அறிவுரைகளென்று கவிதை இயலை, கழுவித்துப்பரவு செய்து உலர்த்துகின்ற காலம் இது. உருவத்தில் புதுமை, உள்ளடக்கத்தில் புதுமையென்று அடிக்கடி அறிமுகப்படுத்தப்படும் மாற்றங்களை கவிதை கண்டு வருகின்றது.

மண்ணின் விலாசத்தையும், மக்களின் உணர்வசைவையும் வெளிப்படுத்துவதில் கவிதையின் பங்கு மகத்தானது. வெளிப்படுத்தல் முறைகள் வேறுபட்டிருந்தாலும், உயிர்ப்புள்ள, கட்டிறுக்கமான ஆக்கங்களை உற்பத்தி செய்து தருவதில் ஆற்றலுள்ள கவிதைப் படைப்பாளர்கள் ஈடுபாடு காட்ட வேண்டும்.

தமிழில் வணிகச் சங்கதிகள் மேலோங்கி வருகின்ற சமகாலத்தில், எழுத்தியலாளர்கள் தழும்பிப் போவதும், கால, தேச வர்த்தமானங்களுக்கேற்ப தங்களது படைப்பியல் உத்திகளை மாற்றி, தடம்மாற்றி, ஆக்க இலக்கியத்துறையை திசை திருப்ப முயற்ச்சிப்பதுமே இன்றைய நடைமுறை.

ஆயினும், இந்த வியாபாரச் சூறாவழிகளுள் சிக்காமல், தங்களது இருப்பையும், தடத்தையும் விட்டுக் கொடுக்காமல் இலக்கிய உழவு செய்து வரும் படைப்பாளர்கள் பரிசீலனைக்கும், பரிசோதனைக்குமுரிய உயர் படைப்புக்களை வெளியீடவே செய்கின்றார்கள். வெற்றிகளும் கொய்கிறார்கள், அதுதான் உண்மை.

இனியும் இது பற்றிப் பார்ப்போம்...

# ஹைக்கூ கோணர்

தலைமுறைக் கோபம்
அடிக்க அடிக்க
அதிரும் பறை

-கவிஞர்.மித்ரா-

## தமிழில் ஹைக்கூ கவிதைகள் 11

மு. முருகேஷ் (தமிழ்நாடு)



இன்றைக்கு தமிழ் ஹைக்கூ கவிதைகளில் மிகுதியாய் வெளிப்படும் உத்திகளிலொன்று விடுகதையாகும். விடுகதை தமிழ் மண்ணின் பழைய சொத்து. அழிப்பான் கதையென்றும் நம் கிராமங்களில் இதைச் சொல்வார்கள். விடுகதை உத்தி ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வீழ்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறதா...?
வண்ணத்துப்பூச்சி.

மோரிடாகி.

உலகப் புகழ் பெற்ற ஜப்பானிய ஹைக்கூ இது.

விடுகதை உத்தியுடன் கூடிய இந்த ஹைக்கூ நம் தமிழ்ப் பார்வைக்கு விடுகதை போலவே இருந்தாலும், ஹைக்கூ கவிதைக்கும், விடுகதைக்குமான முக்கியமான வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமல் நம்மால் தெளிவு பெற முடியாது.

நம் தமிழின் விடுகதையென்பது ஒரு கவித்துவமான கேள்வி -அல்லது- மறைபொருளான கேள்வி, அதற்கான பதில் என்பதாகும். ஆனால், ஹைக்கூ அவ்வாறானது அல்ல.

ஒரு காட்சியின் பின்புலமான உணர்வின் பதிவும், அது எழுப்பும் மனச் சித்திரமுமே ஹைக்கூ. இதில், கவிஞன் கேட்கும் கேள்விக்கு -அல்லது- வரைந்து காட்டும் சித்திரத்திற்கு, எழுதிய கவிஞன் எதிர்பார்க்கும் பதிலையோ, சொல்ல வந்த செய்தியையோ தான்

வாசிப்பவனும் சொல்ல வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும் என்கிற கட்டாயம் ஏதுமில்லை. அனுபவ அலை களை எழுப்புவதோடு முடிந்து விடுகிறது படைப்பாளனின் பணி. அதற்கான எண்ணங்களையும், வண்ணங்களையும் வரைந்து பார்த்துக் கொள்வது வாசகனின் வேலையாக மாறுகிற கூட்டுப் படைப்புப் பணியே ஹைக்கூவின் சிறப்பாகும். ஏனோ இதனைத் தமிழில் ஹைக்கூ எழுகிற பலரும், தமிழ் ஹைக்கூவை வாசிக்கிற மிகப் பலரும் இன்னமும் உணர்ந்து கொண்டதாய்த் தெரியவில்லை.

ஜப்பானியக் கவிதைகளை, தமிழ் ஹைக்கூ கவிதைகளை ஒப்பாய்வு செய்கிற ஆய்வாளர் களும், அவர்களது வசதி கருதி இதைச் சொல்லுவதில்லை. சிலர் சொல்ல மறந்தும் விடுகிறார்கள்.

இனியேனும் விடுகதை வடிவில், அந்த உத்தியில் இருந்தாலும் ஹைக்கூ என்பது வேறு, விடுகதையென்பது வேறு என்பதை தமிழ்கூறு நல்லுலகின் படைப்பாள நண்பர்களும், மாண்புமிகு வாசக நீதிபதிகளும் உணர்ந்து கொண்டு ஹைக் கூவை உள்வாங்கிக் கொள்வதும், உரையாடுவதுமே தமிழுக்கும், தமிழ் இலக்கியச் செறிவிற்கு பெருமை சேர்த்துவரும் ஹைக்கூவிற்கும் செய்கிற மிகப் பெரிய தொண்டாகும்.

**இன்னும் (க)வரும்...**

ஆலய மணியின் மீது
ஒய்ந்து உறங்குகிறது
வண்ணத்துப் பூச்சி.
-பூசன்.

நாற்று நடும் பெண்கள்
எங்கும் சேறு...
அவர்கள் பாட்டைத் தவிர.
-ரைஸான்.

Search for people, places and things Home

Update Status Add Photos/Video

# கவிஞனின் கண்ணீர்க் காணிக்கை



15000 ற்கும் மேற்பட்ட திரைப்பாடல்களை எழுதியவரும் கவியுலகின் மார்க்கண்டேயன் என வர்ணிக்கப்படுபவருமான ரங்கராஜன் எனும் இயற்பெயரையுடைய கவிஞர். வாலி கடந்த 18.07.2013 அன்று தனது 81 வது வயதில் சென்னையில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கவிஞனும் தன் கண்ணீர்ப் புஸ்பங்களைக் காணிக்கையாக்குகின்றது.

Public Post

Search for people, places and things Home

Update Status Add Photos/Video

## கவிஞனைக் கேளுங்கள்

கலைகளின் அரசி கவிதை என்பர் அக் கவிதை சாம்ராஜ்ஜியத்தில் எழும் அனைத்து விதமான வினாக்களுக்கும் விடைதேடும் முயற்சியாக "கவிஞனைக் கேளுங்கள்" எனும் புதிய பக்கம் அடுத்த இதழ் முதல் மலரவிருக்கின்றது.

கவிதை தொடர்பான எந்தக் கேள்வியானாலும் "கவிஞனைக் கேளுங்கள் " விடை காணுவோம்

உங்களது கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

> மின்னஞ்சல் : kavignan@live.com
> தபாலஞ்சல் : கவிஞன்
கூட்டுறவுக்கடைவீதி,
புதுக்குடியிருப்பு - கீ.மா(30158),
மட்டக்களப்பு,
இலங்கை

Public Post



Puvanendran Sisupalan சிந்ரா

✔ நண்பர்கள் ▾ செய்தி

காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும் ▾

# என் தாயும் நானும்

என் தாய் முதலில்
என்னைத்தான் பெற்றிருந்தாள் - ஆனால்
என் பதிவைக் கிழித்து,
ஆதாரங்களைப் புதைத்து
எனக்கு பின்வந்தவனை
என் அண்ணனாக்கியவள்
என் அம்மா.

உருவ அடிப்படையில்
அவன் உயரமாயிருப்பதால்
சாப்பாடு தருகையிலும்
அவனுக்கே அதிகம்
அவன் முட்டையும் பாலும் உண்ணும் போது
நான் பட்டினி
போடப்படுகிறேன்.

அவன் பேசுவதற்கோ
தாராள அனுமதி வழங்குகிறாள்.
நான் பேச மட்டும்
தடைவிதிக்கிறாள்
என்னதான் என்பேச்சை
சிலவேளை சேர்த்தாலும்
அவனின் பேச்சுத்தான் அறுதியென்கிறாள்!

வழிபாடு எனும் போதும்
அவனை மட்டும்
தன்மடியில் இருப்பாட்டி
அரியாசனம் கொடுத்திருக்கிறாள்.
என்னை இறக்கிவிட்டு
என் கைகளுக்கு விலங்கிட்டு
"நீயும் வணங்கலாம்" என்கிறாள்.

அவனின் சுவடுகளையெல்லாம்
அலங்கரித்து வருகிறாள்
எனது சுவடுகளையெல்லாம்
அழித்து வருகிறாள்.

அவனுக்கு மட்டும்
தாலாட்டுப் பாடுகிறாள்
எனக்கு எப்போதும்
ஒப்பாரியே வைக்கிறாள்.

தாயே...!
நானும் உன் வயிற்றில் பிறந்தவனல்லவா
பெத்த பாசம் இல்லாவிடினும்
வளர்த்த பாசமாவது உனக்கில்லையா?

எப்படி இருக்க முடியும் அவளுக்கு

SLAS Cadet at Sri Lanka Institute of Development Administration (SLIDA)
Eastern University, Sri Lanka இல் படித்தேன்
Batticaloa இல் வாழ்கிறார்
Batticaloa இலிருந்து

SLIDA — Satelan Rajendra மற்றும் 11 பிறர் பேர்களுடன்

Colombo, Sri Lanka





Puvanendran Sisupalan

சிந்ரா

✔ நண்பர்கள் ▾ | செய்தி

காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும் ▾

அவள் எங்கே வளர்த்தாள்
நான் தானே வளர்ந்தேன்.

அவன் மேல் கொண்ட பாசத்தால்
எத்தனையோ தடவைகள் என்னைக்
கொலை செய்யப் பார்த்திருக்கிறாள்.
நாவில் தேனூறப் பேசியே
நஞ்சூட்டப் பார்த்திருக்கிறாள்.
ஒப்பந்தங்கள் கொண்டு வந்தே - என்
உயிர் இறுக்கப் பார்த்திருக்கிறாள்.
ஒருகையால் கொடுத்து
மறுகையால் பிடுங்கியிருக்கிறாள்!.

பாரபட்சத்துக்கெதிராய் நான்
தட்டிக் கேட்கையில்
குட்டிக் குட்டியே
என்னை குனிய வைத்திருக்கிறாள்!

நல்லாப் படிக்கும் என்னை
பள்ளிக்கே அனுப்பாமல் - என்
புத்தகங்களையெல்லாம்
புகையாக்கியிருக்கிறாள்.
சரி பட்டதுபோதும்
வேண்டாம் உமது உறவு
நான் தனியே வாழப்போகிறேன் என்றால்
சொத்தையும் பிரித்துத் தருகிறாளில்லை.

எல்லாத்துக்குமாய்
எதிர்ந்தெழுந்த போது
வெளியூரில் இருந்தெல்லாம்
அடியாட்களைக் கூட்டிவந்து
என்னை அடித்துப் போட்டிருக்கிறாள்.

தாய்தானே... இணங்கிப்போ என்கிறார்கள்
இவ்வளவு செய்தவளோடு எப்படி
இணங்கிப் போவது?
சரி இணங்கித்தான் போனாலும்
தாய்க்காக எதனையும்
விட்டுக்கொடுக்கலாம்
தன் மானத்தை எப்படி விட்டுக் கொடுப்பது?

தாயே...
அவனையும் என்னையும்
ஒரே கண்ணால் பார்
அவனையும் என்னையும்
சரிசமமாய் நடத்து
அவனையும் வாழவை,
என்னையும் வாழவிடு
எனக்கான சுயத்தை அங்கீகரி.
என் அடையாளங்களுக்கும்
அனுமதி கொடு

SLAS Cadet at Sri Lanka Institute of Development Administration (SLIDA)
Eastern University, Sri Lanka இல் படித்தேன்
Batticaloaஇல் வாழ்கிறார்
Batticaloa இலிருந்து





Puvanendran Sisupalan சிந்ரா

✔ நண்பர்கள் ▾ | செய்தி

காலக்கோடு | அறிமுகம் | படங்கள் | நண்பர்கள் | மேலும் ▾

எனக்கான அநியாயங்களுக்காய்
மன்னிப்புக்கேள்.

இப்படி நீ நடந்தாயானால்..
உன்னுடன் இணங்கி வருகிறேன்
பூவும் தூவுவேன், பொன்னாடையும்
போர்த்துவேன்.
உன்னில் பேர்மிகுப்
பற்றுக் கொள்வேன்.
தாய் என்று
சொல்வதில் சந்தோசப்படுவேன்.
உழைத்து உழைத்தே உன்னை
உசத்தியாய் வாழவைப்பேன்.
நான் உனக்காக
உழைக்க ஆரம்பித்தால்
இந்த ஊரில் உன்னைவிட எவரும்
வசதியாய் வாழமாட்டார்கள்.


இவ்வாறில்லாமல் மீண்டும்
பாரபட்சம்தான் உன்பதில் என்றால்
மீண்டும் சொல்கிறேன்.
தாய்க்காக
எதனையும் விட்டுக்கொடுக்கலாம்
தன்மானத்தை
எப்படி விட்டுக்கொடுப்பது?

SLAS Cadet at Sri Lanka Institute of Development Administration (SLIDA)
Eastern University, Sri Lanka இல் படித்தேன்
Batticaloa இல் வாழ்கிறார்
Batticaloa இலிருந்து

SLIDA — Saselan Rajendra மற்றும் 11 பிறர் பேர்களுடன்
Colombo, Sri Lanka



# ஈழம் வாழும் என் தமிழ்த் தோழா



ஸ்ரீராம் விக்னேஷ்

✓ நண்பர்கள் ▾ செய்தி ✲ ▾

காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும் ▾

வெந்தழலில் எரிபட்டு
வெடிகுண்டால் பொடிபட்டு
வீண்சாவைக் காண்கின்ற
விழிநிறைந்த தமிழனுக்கு...!

உன்துயரைக் கண்ணுற்று
உள்ளத்தால் கொதிப்புற்று
உணர்வுகளைச் சொல்கின்றோம்
உன்னுதிரத் தமிழர்நாம்...!

தவிக்கின்றோம், துடிக்கின்றோம்
தடுமாற்றம் காண்கின்றோம்
செவிப்பறையில் உன்சாவுச்
சேதிகேட்டு நோகின்றோம்...!

"மூத்திரத்தைக் கயிறு" என்று
முன்னவரின் சொல்மொழியை
உன்னூரார் பேச்சினிலே
உரைப்பதை நீ அறிந்திருப்பாய்!

கொடுமைமிக்க சிங்கத்தால்
கொல்லப் படும்முயல்கள்
குள்ளநரி யைநம்பி
கும்பிட்டுக் குனிந்ததுபோல்...

உன்உணவில் கலப்பதற்கு
உள்ளவிஷம் அனுப்பவைத்த
சின்னபுத்திக் காரரைநீ
சிரம்தாழ்த்தித் தொழுகின்றாய்...!

உன்சாவைக் கண்டபின்னும்
ஊமைக்கொத்த னாயிருக்கும்
அன்னவர்க்குச் செவியுறுப்பு
அற்றதைநீ அறியாயோ...!

சவங்களிடம், ஜடங்களிடம்
சதிக்குதவிக் காரரிடம்
சாவுபற்றி ஓலமிட்டுச்
சாதிக்க என்ன உண்டு...?

பற்றி - திருத்தப் பரிந்துரை படங்கள் 3,651 விருப்பங்கள்




கவிஞர் அஸ்மின்

✓ நண்பர்கள் ▾ | செய்தி

காலக்கோடு | அறிமுகம் | படங்கள் | நண்பர்கள் | மேலும் ▾

# எலி பொரிக்கும் கூட்டுத்தாபனத்தின் செய்திகள்

## (மேதின சிறப்புக் கவிதை)

வணக்கம்
இது எலிபொரிக்கும்
கூட்டுத்தாபனத்தின் செய்திகள்.
செய்தி ஆசிரியர்
பெருச்சாளி
செய்திகள் வாசிப்பது
சு.சுண்டெலி.....

முதலில்
முதன்மை செய்திகள்.

விலங்குகளுக்கு இன்று
விடுமுறை நாளாகும்.

அடிமை விலங்குகளுக்கு
ஆளும் விலங்குகள்
விடுதலை வழங்கி
விருந்தளித்து
விருது வழங்கும்
விசேட நிகழ்வு
இன்று காலை பத்துமணியளவில்
சிங்க ராஜவனத்தில்
சிறப்பாக இடம்பெற்றது.
மாடுகளுக்கு
மாலைபோட்டு
மாநாடு நடத்த
கசாப்புக் கடைக்காரர்கள்
கைகோர்க்கும் நிகழ்வென்று
இந்நிகழ்வை
நீர்யானைகள் விசனித்தாலும்

மான்கள்தான் இக்காட்டின்
மன்னர்கள் என்று
சிங்கமும் புலியும்
சிறப்புரையாற்றி
சிலாகித்தன
இதனைக்கேட்ட
கழுதைகள் கைதட்டின.


இன்றைய மேதினத்தில்
அப்பாவி
ஆடுகளுக்கு
அநீதி நடப்பதாகும்
இடையர்கள் கட்டிவைத்து
அவைகளது
சுதந்திரத்தை பறிப்பதாக கூறி
ஓநாய்கள்
ஊளையிட்டு
ஊர்வலமாய் சென்றன...

மேலும்
இன்றைய நிகழ்வில்

tamil film industry, VASANTHAM TV-ITN Networks மற்றும் Lyricist இல் பணிபுரிகிறார்

University of Colombo இல் படித்தேன்

2,558நபர்கள் பின்தொடர்கிறார்கள்








காலக்கோடு அறிமுகம் படங்கள் நண்பர்கள் மேலும்

மாங்காய்களின்
மறுமலர்ச்சி நிதிக்காக
குரங்குகளின் குத்தாட்டமும்
மாம்பிஞ்சுகளுக்காய்
வண்டுகள் வழங்கிய
இன்னிசை கச்சேரியும்
இடம்பெற்றன.

பாட்டிகளிடம் இருந்து
வடைகளை பாதுகாப்போம்
என்ற தொனியில்
காகம் கத்தித் திரிய....

காகங்களிடம் இருந்து
வடைகளை காப்பாற்றுவோம்
என்ற வாசகத்தை
ஏந்திப்பிடித்தபடி
நரிகள் சேர்ந்து
நடைபவனி சென்றதாகவும்
செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்து
வெளி நாட்டு
செய்திகள்

வளைகுடாவில் அலைகளின்
ஆபத்தில் இருந்து
மீன்களை மீட்பதற்காய்
வலைகளும் தோணிகளும்
நடத்திய உண்ணாவிரதம்
இன்று இரண்டாவது நாளாகவும்
வெற்றிகரமாக நடைபெற்றது.


கோழிக்குஞ்சுகளுக்கான
விசேட காப்புறுதி திட்டத்தை
பருந்துகள்
பாராளுமன்றத்தில்
நேற்று
நிறைவேற்றியுள்ளன.

இதற்கு கடுவன் பூனைகளும்
கீரிப்பிள்ளைகளும்
கடந்தகால கசப்புணர்வை மறந்து
இணைந்து
வாக்களித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தோடு
இன்றைய செய்திகள்
நிறைவு பெறுகின்றன..

அடுத்த செய்தி
அடுத்த வருடம்
மே மாதம் முதலாம் திகதி
வழமைபோல் இடம்பெறும்
வணக்கம்.!!

Tamil film industry, VASANTHAM TV-ITN Networks மற்றும் Lyricist இல் பணிபுரிகிறார்
University of Colombo இல் படித்தேன்
2,558நபர்கள் பின்தொடர்கிறார்கள்



# Tamil Kadhal Kavithaigal

வைரமுத்து பிறபான்னு கருவில் நீ சு


ல் நீ சுமந்த ஒன்னு வைரமுத்

ravi.karthi.cute@facebook.com



**Tamil Kadhal Kavithaigal** ✓ விரும்பியது செய்தி

98,243 விருப்பங்கள் · 8,582 இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்













மொத்த விருப்பங்கள்


98,245

Page Admins



Ravi Karthi

பின்தொடர்



facebook WWW.Kavignan.com கவிஞன்




SLTLM · பற்றி · நிகழ்ச்சிகள் · படங்கள் · கோப்புகள் · அறிவிப்புகள் · + குழு உருவாக்கு

திறந்த குழு
இலங்கையில் தமிழில் வெளிவரும் சிறுசஞ்சிகளுக்கான குழு இது.

SLTLM@groups.facebook.com

அனைத்து உறுப்பினர்க... Find a Member · + மக்களைச் சேர்க்கவும்

**Mathan Sathasivam**




**Kavignan 22 (கவிஞன்-22)**
issuu.com
காலாண்டுக் கவிதையிதழ் தை, மாசி, பங்குனி - 2013


விருப்பம் · கருத்து · Unfollow Post · பகிர்க · 24 ஜூன் இல் 06:01 PM

ஸ்ரீ ஸ்ரீஸ்கந்தராஜா, முனைவென்றி நா. சுரேஷ்குமார், Gopaal Naathan மற்றும் வேறு 3 பேர்கள் இதை விரும்புகிறார்கள். ✔ Seen by 59

**Rajaji Rajagopalan** உங்கள் கவிதை இதழ் கண்டேன். பிந்தினாலும் கவிதை உணர்விலும் இதழ் அமைப்பிலும் முந்தி நிற்கிறது. "கவிஞன்" தொடர்ந்து கவிக்கடனாற்ற வாழ்த்துகள்.
24 ஜூன் இல் 07:47 PM · பிடிக்கவில்லை · 1

உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்...

**Mathan Sathasivam**




**Mathan Sathasivam**
Nursing Officer ஆக Base hospital kattankudy இல்
ஒரு வருடம் முன் அன்று இணைந்தார்

**Rajaji Rajagopalan**
மற்றும் Memon Kavi
கமார் 12 மாதங்களுக்கு முன்

**Memon Kavi**
Colombo, Sri Lanka
ஒரு வருடம் முன் அன்று இணைந்தார்

**யாழ். இலக்கியக் குவியம்**
University of Jaffna, Sri Lanka
மற்றும் Memon Kavi ஒரு வருடம் முன்

**Mullai Amuthan**
London, United Kingdom
மற்றும் Memon Kavi ஒரு வருடம் முன்

**மன்னார் அமுதன்**
Writer ஆக Writer/Activist இல்
ஒரு வருடம் முன் அன்று இணைந்தார்

**Uma Varatharajan**
Shivananda Vidyalayam, Fatima College, Wesly High School
ஒரு வருடம் முன் அன்று இணைந்தார்

**Dr.Muttiah Kathiravetpillai Muruganandan**
Medical Faculty, University of Ceylon
ஒரு வருடம் முன்

Nursing Officer at base hospital kattankudy
2011 முதல் தற்போது வரை

College of Nursing Batticaloa இல் படித்தேன்
கடந்தகாலம்: Sivananda





# நூலங்காடி

உங்கள் நுகர்வுக்காய் எங்கள் பகிர்வு




| | |
|---|---|
| தலைப்பு | : உனை நீயே செதுக்கு |
| வகை | : கவிதை |
| ஆசிரியர் | : சொற்சிற்பி இ. சபா |
| முகவரி | : வம்மிக்கேணி வீதி, செட்டிபாளையம், இலங்கை. |
| வெளியீடு | : AIM Publishers. |
| விலை | : ரூபா 200.00 |




| | |
|---|---|
| தலைப்பு | : மூதூர் உமர் நெய்னார் புலவர் கவிதைகள் |
| வகை | : கவிதை |
| ஆசிரியர் | : மூதூர். எம். எம். ஏ. அனஸ் |
| வெளியீடு | : கலை இலக்கிய ஒன்றியம், மூதூர். |
| விலை | : ரூபா 200.00 |

# Aathithya Digitals

**மட்டுமா நகரில்**

துரிதமான சேவை

துல்லியமான வேலை






**வெனர்கள், விளம்பரப் பலகைகள், ஸ்ரிக்கர்கள், canvas paper printing, wide format photo printing**

MEANING OF CREATION...

AATHITHYA

ஆதித்யா

Digitals

**DIGITAL PRINTING**

065 2223134
077 1988531

258/B TRINCO ROAD, BATTICALOA

e -mail : aathithyadb@gmail.com

வணசிங்கா பிறிண்டர்ஸ், மட்டக்களப்பு. 065 222 7170